# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.113/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 06-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 06 | தொழில் | - | ஓட்டுநர் |
| பெயர் | - | கருப்பசாமி | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | பேச்சி அண்ணன் | சமயம் | - | |
| கிராமம் | - | ஆச்சிபட்டி, பொள்ளாச்சி | வயது | - | 57/2025 |
| சாதி | - | | | | |

**17-11-2025**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வேன் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். எதிரி தனுஷ்கிசன் என்பவரை ஒரு முறை பார்த்துள்ளேன். எதிரி அ.சா.1-ன் மகன் ஆவார். நான் அ.சா.1-க்கு டாடா கார் வாகனத்திற்கு ஓட்டுநராக வேலை செய்து வந்தேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. காலை 09.30 மணிக்கு மேல் அ.சா.1-ன் எஸ்டேட்டில் உள்ள வீட்டின் முன்பு நான் காரை சுத்தம் செய்து கொண்டிருந்தேன். அ.சா.1 அவரது வீட்டிற்குள் நுழைய வந்தார். அப்போது, எதிரி அ.சா.1-ஐ தடுத்து வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும் போது, வீட்டிற்குள் செல்ல கூடாது என்று சொன்னார். சம்பவத்தின் போது, நானும் மற்றொரு ஓட்டுநர் அங்கிருந்தார். அவர் பெயர் தற்போது ஞாபகமில்லை. அப்போது, அ.சா.1 காரில் இருந்த சுத்தியலை எடுத்து எதிரியை அடிக்க சென்றார். எதிரி அவரை தடுத்தார். எதிரி அ.சா.1-ன் மீது கை வைத்து தள்ளினார். பின்னர் அ.சா.1

நெஞ்சு வலிப்பதாக சொல்லி மருத்துவமனைக்கு சென்றார். இந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. எத்தனை வருடங்களாக அ.சா.1-னிடம் நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 6 மாதங்களாக பணிபுரிந்து வந்தேன். மதனகோபால் தான் சுத்தியலை எடுத்து எதிரியை அடிக்க சென்றாரா என்றால் ஆமாம். அதற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

# DEPOSITION OF WITNESS

# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.113/2023**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17- ம் நாள் திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.07 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 07 | தொழில் | - | கூலி வேலை |
| பெயர் | - | ராஜேந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | குரங்குமுடி | வயது | - | 62/2025 |
| சாதி | - | | | | |

**<u>17-11-2025</u>**

## ( எதிரி ஆஜரில்லை)

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மதனகோபால் என்பவரை தெரியும். எதிரி தனுஷ்கிசன் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. கடந்த 10.10.2023-ம் தேதி காலை 11.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய போலீசார் குற்ற எண் 177/2022 வழக்கு தொடர்பாக கேஜிஆர் எஸ்டேட்டிற்கு வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்போது போலீசார் என் முன்பாகவும், சாமிகண்ணன் என்பவர் முன்பாகவும், சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் நானும், சாமிகண்ணன் என்பவரும் பார்வை மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**: இல்லை

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.